## இணைப்பு 9

## உபகரணங்களைப் பேணலும் அவற்றை செப்பனிடலும்

### உபகரணங்களைப் பேணல்

அளவீட்டின் திருத்தத் தன்மையை உறுதி செய்வதற்காக, நிறைபார்த்தல் அல்லது நீளம்/உயரம் பார்த்தலுக்கு பயன்படுத்தப்படும் உபகரணத்திற்கு முறையான கவனமும் பராமரிப்பும் வழங்கப்படுதல் அவசியமாகும் .எல்லா உபகரணங்களும் சுத்தமாக வைக்கப்படுவதோடு சாதாரண அறை வெப்பநிலையில் அவை களஞ்சியப்படுத்தப்பட்:டு ஈரப்பதன் ஈரலிப்பு என்பவற்றிலிருந்து பாதுகாக்கப்படுதலும் வேண்டும்

முதற் தடவையாக உபகரணம் பயனபடுத்தப்படும் ‌ ்போது அதன் திருத்தத் தன்மையை நியம அளவைகளைப் பயன்படுத்தி சரிபார்க்கவேண்டும். அதன் பின்னர் இந்த முறைமையின்படி நிறுத்தல் மற்றும் நீளம்/உயரம் பார்க்கும் உபகரணத்தின் செம்மைத் தன்மை உபகரணத்தொடு வழங்கப்பட்ட விதந்துரைகளுக்கு ஏற்ப ஒழுங்கான கால இடைவெளிகளில் மறுபடி மறுபடி சரிபார்க்கப்படுதல் வேண்டும்.

### நிறுக்கும் உகரணங்களின் திருத்தமான அளவீட்டுத் தன்மையை சரிபார்த்து உறுதிசெய்தல்

புயத் தராசுகளின் திருத்தத் தன்மையை நியம நிறைகளைப் பயன்படுத்தி மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையும் விற்றராசுகளின் திருத்தத்தன்மையை நியமநிறைகளைப் பயன்படுத்தி மாதமொருதடவையும் சரிபார்க்க.

குழந்தைகளுக்கான புயத் தராசில் நியம நிறைகளாக 10 கிராம் ,100கிராம், 500கிராம், 1 கிலோ, 2 கிலோ என்பன பயன்படுத்தப்படவேண்டும்.1 0 கிராம் நியமநிறை விற்றராசுக்கு வேண்டியதில்லை. பெரியவர்களுக்கான புயத் தராசில் நியம நிறைகளாக, 100 கிராமிலிருந்து 5 கிலோகிராம் வரைபயன்படுத்தலாம்.

நியமநிறைகள் கிடைக்காதபோது,தெரிந்த சரியான நிறையுள்ளபொருள் அவற்றுக்கு பதிலாக இத் தேவைக்குப் பயன்படுத்தப்படலாம்.

அளவீடு திருத்தமானதாக இல்லாவிடின் உபகரணத்தை செம்மைப்படுத்தல் தேவைப்படும். அது ஒரு குறிக்கப்பட்ட அளவுவாக இருப்பின் (உம்: எல்லா நிறைகளுககும் வாசிப்பு 0.2 கி.கிராம் ஒரேதிசையில் வேறுபடுதல்) நிறைபார்ப்பவர் கணிதச் செயல்பாடுகளினால் சரியானஅளவைத் துணியலாம் அத்தோடு இக்குறைபாடு அடுத்த நிறைபார்த்தலில் சரிசெய்யப்படலாம்: ஆனால் அளவீடுசெய்பவர் மிகவிழிப்பாக இருக்கவேண்டும் ஏனெனில் இந் நிரந்தரகுறைபாடு நாட்கள் செல்லஅளவு மாறக்கூடும்.

குறித்தவழு நிரந்தரமான கணியமல்லாதபோது, உபகரணம் நிறைபார்க்க பயன்படுத்தமுடியாது

### நீள/உயர அளவீட்டு உபகரணங்களை செவ்வை பார்த்தலும் திருத்தத் தன்மையை உறுதிப்படுத்தலும்

- நீள/உயர அளவைப் பலகைகளை/துண்டங்களை பொருத்தும்போது, அளவு தெரிந்த நீளத் துண்டங்களை அளந்து, உபகரணம் சரியாக அளவை காட்டப்படுகிறதா என செவ்வை பார்க்க
- பொருத்துக்கள் இறுக்கமாகவும் நேராகவும் உள்ளதா எனப் பார்க்க. இல்லையாயின் அவற்றை இறுக்குக, நேர்ப்படுத்துக
- அளவீட்டு நாடாவை தெளிவாக வாசிக்க முடிகிறதா என சரிபார்க்க. அது மிகவும் துலக்கமின்றிக் காணப்படின் அது மாற்றீடு செய்யப்பட வேண்டும்